தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

State Planning Commission.

*Q. No. 298—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether a new Vice Chairman for the State Planning Commission has been appointed during April 1978 ;

(*b*) the details of the qualification of the incumbent ; and

(c) the details of the qualifications prescribed for the appointment of the post?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம். மாநிலத் திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவராக திரு. கோவை செழியன் 1978 ஏப்ரலில் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) எம். ஏ.

(இ) பல துறைகளில் அனுபவம் பெற்றவர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர்கள் இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட கல்வித் தகுதி எதுவும் வரையறுக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, திட்ட ஆணைக் குழு நிறைவேற்ற வேண்டி இதுவரை அரசுக்கு பரிந்துரை செய்த திட்டங்கள் எவை, எவை? அவற்றில் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள் எவை, எவை? அவைகளுக்கான மதிப்பீட்டுத் தொகை என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, திட்டங்கள் எவை, எவை என்பதைச் சொல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் அதற்கு தனிக் கேள்வி போட்டால் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலும்.

[1979 மார்ச் 9

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நமது அமைச்சரின் செயலர் அவர்கள் இங்கே நியமிக்கப்பட்டுள்ள துணைத் தலைவருடைய நிலைபற்றிக் குறிப்பிட்டார்கள். நியமிக்கப்பட்டுள்ள துணைத் தலைவருக்கு அமைச்சர்களுக்கு வழங்கப்படுகின்ற அத்தனை சலுகைகளும் வழங்கப்படுகின்றது என்பது உண்மையா? அவருக்கு அளிக்கப்பட்டுவரும் மாதச் சம்பளம் என்ன? இதர சலுகைகள் யாவை?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அமைச்சர்களுக்கு வழங்கப்படும் அத்தனை சலுகைகளும் அவருக்கு வழங்கப்படவில்லை.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவருக்கு வழங்கப்படுகின்ற மாதாந்திர சம்பளம் எவ்வளவு? இதர படிகள் என்ன, என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அந்தக் குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்தத் திட்ட ஆணைக் குழுவில் தற்போது இருக்கும் நிர்வாகிகள் யார் யார் என்று அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைவர்; திரு. கோவை செழியன் அவர்கள் துணைத் தலைவர்; டாக்டர் என். சண்முகசுந்தரம், பார்ட் டைம் மெம்பர்; திரு. கே. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்., மெம்பர்; திரு. என். ஹரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ்., மெம்பர்; திரு. டி. வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ்., மெம்பர்; திரு. ஆர். நாகராஜன், ஐ.ஏ.எஸ்., மெம்பர் அண்ட் செயலாளர் ஆகியோர் இருக்கிறார்கள்.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, இந்தத் திட்டக் குழுவின் பொறுப்புகள் யாவை ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, திட்ட ஆணைக்குழு சமுதாயத்திலே ஏற்படும் மாற்றங்களை கண்காணித்து, அவ்வப்போது மதிப்பிட்டு அறிந்து அவற்றைச் செயற்படுத்த அவசியமான நடவடிக்கைகளுக்கு தேவையான பரிந்துரைகளை அனுப்பி வைத்தல்; மாநிலத்தில் பொருளாதார நடவடிக்கைப்பற்றி அரசுக்கு ஆலோசனை அளித்தல்; மாநிலத்திற்குத் தேவையான திட்டங்களை வகுத்தல்,

1979 மார்ச் 9]

அவற்றை செயல்படுத்த பொருளாதாரத் திட்டங்களை வரையறை செய்தல், 10 ஆண்டு கால 1974 முதல் 1984 வரையில்-சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டுதல் ஆகிய பணிகளைச் செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 299-ஐயும், 300-யும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

நெல், அரிசி கொள்முதல்.

*வினா எண் 299—திரு. எம். செல்வராஜ் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1977–78-ம் ஆண்டுக்காக அரசாங்கம் கொள்முதல் செய்த நெல், அரிசி எவ்வளவு?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. உரோ.— எட்மண்ட் : (அ) 1977 குறுவை பருவத்திலும் 1978 சம்பா பருவத்திலும் 17—10—1977 முதல் 16–8–1978 வரை 3·29 இலட்சம் அரிசி டன்களுக்கு ஈடான நெல்/அரிசி கொள்முதல் மூலமும் வெளிச்சந்தையிலும் வாங்கப்பட்டுள்ளது.

(ஆ) அதன் மதிப்பு ரூ. 49 கோடியாகும்.

*வினா எண். 300—திரு. ஆ. நடராஜன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1–6–1977-க்குப் பின் அரசு வெளிமாநிலங்களில் அரிசி கொள்முதல் செய்ததா?

(ஆ) எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது?

(இ) கோவை மாவட்டத்திற்கு அதிலிருந்து அனுப்பப்பட்ட அரிசிக்கு ரயில்வே இலாகாவுக்கு செலுத்தப்பட்ட வாடகை, அபராதத் தொகை (டெமரேஜ்) எவ்வளவு

(ஈ) அதற்கான காரணம் யாது ?